**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் 40–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2013–14 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் தனி அரங்கம் அமைக்க அனுமதி மற்றும் ரூ.4.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.04 நாள்:17–02–2014
விஜய, மாசி5,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.06 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 31–01–2013.
2. அரசாணை(நிலை) எண்.86 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 26–09–2013
3. அரசாணை(நிலை) எண்.304 சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை, நாள் 26–11–2013.
4. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.005857/புஇஅ/2013–1, நாள் 20.11.13, 9.12.13 மற்றும் 20.12.13.

-------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 39–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தனி அரங்கம் அமைக்கத் தேவையான புகைப்பட திரட்டு, விளம்பரம் மற்றும் செயல்திட்டம் குறித்த பலகைகள், சுவரொட்டிகள், உபகரணங்கள் மற்றும் சுழலும் மேடையில் மோட்டார் சைக்கிள் பொருத்தி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2013 ஆம் ஆண்டு தீவுத்திடலில் நடைபெற்ற 39–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கென தனி அரங்கம் அமைத்ததில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு ரூ.99,250/– கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 40–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் நடத்துவதற்கு அனுமதி மற்றும் பல்வேறு அரசு துறைகள் அதில் பங்கு பெற ரூ.75.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே, நான்காவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் 40–வது அகில இந்திய சுற்றலா மற்றும் பொருட்காட்சியில், துறை சார்பாக அரங்கம் அமைத்திட ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்படி, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கருத்துருவை ஏற்று, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மூலம் நடத்தப்படும் 40–வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் சென்ற ஆண்டை போலவே, நடப்பு நிதியாண்டிலும் (2013–14) மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக தனி அரங்கம் அமைத்திடவும், உபகரணங்கள், விளம்பரப் பலகைகள், புகைப்படத் திரட்டு, மற்றும் செயல் திட்டம் குறித்த பலகைகள் தயாரித்து, பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் சிறப்பாக செயல்படுத்த, 2013–14ம் நிதியாண்டில் ரூ.4.00 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையில் மின்நுகர்வு கட்டணமாக ரூ.25,000/– முன்பணமாக வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> "2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன் –001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்–08. விளம்பரமும் பிரச்சாரமும்–02. பொருட்காட்சி".
> (து.தொ.கு. 2235 02 001 AF 0821)

7. மேலே 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை ரூ.4.00 இலட்சம், 2013–14 ம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2013–14 ம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்தை, 2013–14ம் ஆண்டிற்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாமல் நிதித்துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.6881/நிதி(சந)/14, நாள்14.02.2014–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.2837 (இரண்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
தலைமைக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–2.

**நகல்:–**

நிதி (சந)/(வ.செ.பொ. II)த் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலைய(சு3)த் துறை,சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.